செய்தி வெளியீடு எண்:792 நாள்:27.09.2021

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால் 20.06.2021 அன்று தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் திறந்து வைக்கப்பட்ட **"மின்னகம்"** (மின் நுகர்வோர் சேவை மையம்) இன்றோடு நூறு நாட்கள் நிறைவடைந்ததையொட்டி மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு,V செந்தில் பாலாஜி அவர்கள் நேரடியாக ஆய்வுசெய்து மின்னகம் மேலும் சிறப்பாக செயல்பட துறை சார்ந்த அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் திரு. ராஜேஷ் லக்கானி இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர் திரு, எஸ். சண்முகம், இயக்குநர்/பகிர்மானம் திரு. மா. சிவலிங்கராஜன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்,

**பின்னர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசியதாவது:—**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் 20.06.2021 அன்று தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான தலைமை அலுவலகத்தில் தமிழ்நாட்டில் மின் நுகர்வோர்கள் 24 மணி நேரமும் தங்களுடைய புகார்களை தெரிவிக்க மின்னகத்தை (94987 94987) தொடங்கி வைத்தார்கள. அன்று முதல் நேற்று (26.09.2021) வரை 3,53,000 புகார்கள் வரப்பெற்றுள்ளன. இதில் 3,50,000 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. அதாவது, 99 சதவீதம் புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் இருக்கக்கூடிய 3.16 கோடி மின் நுகர்வோர்களுக்கு சிறப்பான சேவையை வழங்கிடும் சீரிய நோக்கத்தோடு மின்னகத்தை தொடங்கி வைத்தார்கள்.

கடந்த காலங்களில் மின்நுகர்வோர்கள் மின்வாரியத்திற்கு புகார் தெரிவிக்க 106 சேவை எண்கள், 1912—உடன் சேர்த்து ஏறத்தாழ 107 சேவை எண்கள் செயல்பட்டன. இவை எல்லாவற்றையும் ஒருநிலைப்படுத்தி ஒருமுகப்படுத்தி ஒன்று சேர்த்து ஒரே எண்ணில் புகார் தெரிவிக்க அதன் மூலம் தீர்வு காண வேண்டும் என்று மின்னகம் மின் நுகர்வோர் சேவை மையத்தை (94987 94987) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி

வைத்தார்கள். இன்று 100 நாட்களை கடந்து பொதுமக்களுக்கு சிறப்பான சேவையை வழங்கி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி மின்வாரிய அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் சிறப்பாக பணிபுரிந்து வருகிறார்கள். அரசு ஆட்சி பொறுப்பேற்ற நான்கு மாத காலத்தில் மின்சார வாரியத்தில் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் மாண்புமிகு முதல்வர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் தொடர் நடவடிக்கையாக தமிழகத்தில் நம்முடைய மின் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு மின் உற்பத்தியிலும், மின் நுகர்வோர்களுக்கு சேவை வழங்கும் வகையிலும் செயல்பாடுகள் அமையும். அதன் அடிப்படையில்தான் மின் உற்பத்திக்கு தேவையான திட்டங்களை நடந்து முடிந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. மேலும், மின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவவும் பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. இதுவரை தமிழக வரலாற்றில் இல்லாத அளவாக ஒரே வருடத்தில் 1,00,000 விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்பு வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தினை மார்ச் மாதத்திற்குள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி செய்து முடிக்கப்படும்.

கடந்த 9 மாதங்களில் மின் பராமரிப்பு பணிகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை, செய்யப்படவில்லை என்ற நிலையில், அவை எல்லாம் கணக்கெடுக்கப்பட்டு 10 நாட்களில் 2.30 இலட்சம் பராமரிப்பு பணிகள் கணக்கெடுக்கப்பட்டு 2.72 இலட்சம் பராமரிப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 42,000 பராமரிப்பு பணிகள் கூடுதலாக எடுக்கப்பட்டு செய்து முடிக்கப்பட்டுள்ளது.

மேலும், எந்த இடத்தில் மின் அழுத்தம் அதிகம், குறைவு என்று கணக்கெடுக்கப்பட்டு 8905 இடங்கள் கணக்கெடுக்கப்பட்டன. அந்த இடங்களில் உடனடியாக புதிய மின் மாற்றிகளை அமைக்க வேண்டும் என்று வாரியம் முடிவெடுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதிபெற்று, அதற்கேற்ற நிதி ஆதாரத்தை உருவாக்கி கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் அந்த பணிகள் துவக்கி வைக்கப்பட்டு பணிகள் துரிதமாக நடைபெற்றுவருகிறது. இந்த பருவமழையை பொறுத்தவரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அனைத்து துறைகளுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மின்சாரத் துறைக்கு பல்வேறு அறிவுரைகளை

வழங்கியுள்ளார்கள். மின்சாரத் துறையை பொறுத்தவரை வரக்கூடிய பருவமழை காலத்தில் தடையில்லா மின்சாரம் வழங்குவதற்காக ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மின் கம்பங்கள் கையிருப்பில் உள்ளது. தேவையான உபகரணங்களும் கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளது. எந்த இடங்களில் இடர்பாடு வருகிறதோ அதை உடனடியாக நிவர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு அந்தந்த மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் சேர்ந்து மின்வாரிய அதிகாரிகள் ஒன்றிணைந்து இடர்பாடு பணிகளை நிவர்த்தி செய்ய மின்சார வாரியம் தயார் நிலையில் உள்ளது.

மின்னகத்திற்கு வரப்பெற்ற புகார்களில் ஏறத்தாழ 44,767 புகார்கள் மின்கட்டணம் சம்பந்தமானது. அவை அனைத்திற்கும் தீர்வு காணப்பட்டுள்ளது. தற்போது இதுபோன்ற புகார்கள் வருவதில்லை. அதேபோல் பராமரிப்பு பணிகள், புதிதாக மின்மாற்றிகள் அமைக்கும் பணிகள் நிறைவு பெருகின்ற போது மின்தடை சம்பந்தப்பட்ட புகார்களின் எண்ணிக்கையும் குறையும். படிப்படியாக இப்புகார்களை குறைப்பதற்கான முழு முயற்சிகளை எடுத்து இருக்கிறோம். தமிழகத்தில் 3,63,000 மின்மாற்றிகள் உள்ளன, அந்த மின்மாற்றிகள் பழுது ஏற்படும்போது மின்நுகர்வோர்கள் அல்லது பணியில் இருப்பவர் தகவல் தெரிவித்தால்தான் அது பழுது ஆகிவிட்டது என்பதை அறிய முடியும். எனவே, அந்த நிலையை போக்குவதற்கு 3,63,000 இடங்களிலும் DT மீட்டர் அமைப்பதற்கு கடந்த சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ ரூ.1270 கோடி மதிப்பீட்டில் அந்தப் பணிகள் நடைபெற இருக்கின்றன. அனைத்து மின் இணைப்புதாரர்களுக்கும் அவர்களே அவர்களுடைய மின்அளவீட்டை பார்த்து கொள்ளும் அளவிற்கு Smart meter பொருத்தக்கூடிய அறிவிப்பும் சட்டமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தளபதி அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற நாள்முதல் தமிழ்நாட்டினை மின்மிகை மாநிலமாக மாற்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார். கடந்தகால ஆட்சியில் எந்தவிதமான வளர்ச்சித் திட்டங்களோ புதிய திட்டங்களோ இல்லை. ஆட்சிப் பொறுப்பேற்ற குறுகிய காலத்தில் 1,32,500 கோடி அளவிற்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், முதற்கட்டடாக திருவாரூரில் சூரிய மின்சக்தி பூங்கா அமைக்கும் அறிவிப்பையும் செய்துள்ளார்கள்.

மின்னகத்தின் மூலம் பயன் அடைந்தவர்கள் சொல்லும் வார்த்தைகளை நாங்கள் கேட்கும்போது அது எங்களை இன்னும் வேகப்படுத்துகிறது. 100 நாட்களில் ஒரு சாதனையை மின்சார வாரியம் செய்திருக்கிறது. மின்சார வாரியம் சிறப்பாக செயல்படுகிறது.

அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டும் நிதிநிலைமைக்கு ஏற்ப எந்த காலிப் பணியிடங்கள் அவசியம் என்று வாரியம் முடிவு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி படிப்படியாக காலியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். தொடர்ந்து மின்சார வாரியத்தின் செயல்பாடுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கண்காணித்து, பல்வேறு ஆலோசனைகளையும் உத்தரவுகளையும் வழங்கி வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மின்சார வாரியத்தை மேம்படுத்தி, வடிவமைத்து மின் நுகர்வோர்களுக்கு சிறப்பான சேவையை வழங்குவோம், வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

நன்றி.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9